**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு - 2019**

---

## 1. அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் காசுப்பாய்ச்சலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ''சிறப்பாகத் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அத்தியாவசதியமானதாகும்.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 03 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் 2019 ஆம் ஆண்டின் போது கணக்காய்வுக் குழு 02 கூட்டங்களை மாத்திரம் நடாத்தியிருந்தன. | 2019 ஆம் ஆண்டின் போது 4 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் சனவரி, பெப்ரவரி மற்றும் திசெம்பர் மாதங்களில் ஆணைக்குழு இல்லாததுடன் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஆணைக்குழு கூட்டங்கள் நடாத்தப்படவில்லை கணக்காய்வு குழுக் கூட்டங்களுக்கு ஆணைக்குழுவின் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட கூட்டுச்சேர்ப்பு அத்தியாவசியமானதாகும். ஆணைக்குழுவின் இரண்டு அங்கத்தவர்கள் யூன் மாதம் 201 ஆவது கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாக இந்த ஆண்டில் 2 கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை மாத்திரம் நடாத்தக் கூடியதாக இருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (1)(ஊ) ஆம் பிரிவு | அரசாங்க தொழில் முயற்சியில் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தில் பதவியை வகித்து 12 ஆண்டுகள் காலத்தை பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு சுங்கத் தீர்வையற்ற வாகன அனுமதிப் | சபையின் பணிப்பாளர் 1999 சனவரி 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் (தரம் II) பதவிக்கு இண்டு ஆண்டுகளுக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் தொடர்ச்சியாக 2003 | திறைசேரி செயலாளரின் 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (i)(ஊ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியும் என சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளதுடன் அதற்கு முரணாக ஆணைக்குழுவின் பணிப்பாளரால் 2011 யூன் 08 ஆந் திகதிய சுங்கத் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் ஒரு வாகனம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. அவரின் நியமனத் திகதி 2003 யூலை 31 ஆந் திகதியானதுடன் சுங்கத் தீர்வையற்ற வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட திகதியில் அவரின் சேவைக்காலம் 7 ஆண்டுகள் 10 மாதங்கள் 7 நாட்கள் அளவில் இருந்தது. எவ்வாறாயினும், இது சம்பந்தமாகப் பரீட்சித்துப் பார்த்து தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அல்லது அப்பணத்தை பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

யூலை 03 ஆந் திகதி வரை மேற்கூறிய பதவியில் நீடிக்கப்பட்டது. 2003 யூலை 31 ஆந் திகதி அவருக்கு மேற்கூறிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மத்தியில் DMS 30 சுற்றறிக்கைக்கு இணங்க 2007-02-13 ஆந் திகதியில் MM 1.3 சம்பளத் தொகுதியின் I ஆந் தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தார்.

2011 ஆம் ஆண்டில் அவர் பெற்றுக்கொண்ட வாகன உத்தரவுப் பத்திரத்தை கவனத்திற்கு எடுத்தக்கொண்ட போது அவர் ஒப்பந்த காலத்துடன் 12 ஆண்டுகள் ஆகக்குறைந்த செயற்பாட்டு சேவைகள் காலத்தை பூர்த்தி செய்திருந்ததுடன் ஒப்பந்த காலத்தை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது விட்டால் ஆகக் குறைந்த 12 ஆண்டுகள் சேவைக்காலம் பூர்த்தி செய்யப்படவில்லை.

2011 ஆம் ஆண்டிற்கான TTIP/01/2010(i) ஆம் இலக்க சுற்றறிக்கையில் செயற்பாட்டு சேவைக் காலத்திற்கு ஒப்பந்த காலம் உள்ளடங்குகின்றது / உள்ளடக்கப்படுவதில்லை என்பது தெளிவாக காட்டப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,347,865 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4.510,610 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 9,858,475 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட மூலதன மானியம் ரூபா 10,171,825 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் பிரதான வருமான விடயமான அபிவிருத்திக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதன மானியம் ரூபா 10,171,825 ஆலும் மீண்டுவரும் மானியம் ரூபா 3,554,506 இனாலும் குறைவடைந்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 76 சதவீதம் மற்றும் 12 சதவீத வீழ்ச்சியாகும். அதனுடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவு ரூபா 6,375,248 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளணி வேதனச் செலவு ரூபா 1,017,664 ஆல் அதிகரித்திருந்தது. போக்குவரத்துச் செலவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் ரூபா 290,465 ஆல் குறைவடைந்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

2019 ஆம் ஆண்டிற்கான நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் முறையே 0.51:1 மற்றும் 0.49:1 ஆக இருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது அந்த விகிதம் முறையே 1.12:1 மற்றும் 1.1:1 ஆகும். 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நடைமுறை மூலதனத்தில் வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் பணிப்பாளர் 2018 பெப்ரவரி 20 ஆந் திகதியிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 19 ஆந் திகதி ஆணைக்குழுவின் நிருவாக சபை அறிக்கையின் பிரகாரம் 2018 யூலை 09 ஆந் திகதி கட்டாய விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. எனவே இந்த உத்தியோகத்தருக்கு 2018 மார்ச் 01 ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி | நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் 2018 யூலை மாதம் 9 ஆந் திகதி நடைபெற்ற 193 ஆவது ஆணைக்குழு கூட்டத்தின் மூலம் கட்டாய விடுமுயைில் அனுப்பப்பட்டிருந்தார். அந்த ஆணைக்குழுக் கூட்டத்தில் முன்னாள் பணிப்பாளருக்கு தொடக்க சம்பளமும் படிகளும் (வாழ்க்கைச் செலவுப் படியும் தொழில்சார் படியும்) செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க அச் சம்பளத்தை செலுத்துதல் தொடக்க விசாரணை | கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு செலுத்தக் கூடியதானது ஒழுக்காற்று விசாரணை முடிவடைந்து அதன் சிபார்சின் அடிப்படையில் மாத்திரமாகும் என்பதுடன் அதன் அடிப்படையில் செயற்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 3,036,619 செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணம் ஆணைக்குழுவின் சிக்கனமற்ற செலவாக இருந்தது. | முடிவடையும் வரை அதாவது 2020 யூன் மாதம் வரை அமுல்படுத்தப்படும். ஆணைக்குழுவின் புதிய தலைவர் 2020 சனவரி மாதம் 16 ஆந் திகதி வேலையை ஆரம்பித்ததன் பின்னர் இதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன் பதில் கடமையாற்றும் பணிப்பாளருடனான தொடக்க புலனாய்வு அறிக்கை 2020 ஏப்ரல் மாதம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் சிபார்சு யூன் மாதம் நடைபெற்ற ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டது. அதற்கிணங்க யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து முன்னாள் பணிப்பாளரின் சேவையை சம்பளமின்றி கைவிடுவதற்கும் குற்றப் பத்திரம் வழங்குவதற்குமான தீர்மானம் அமுல்படுத்தப்பட்டது. தொடக்க விசாரணை உத்தியோகத்தரால் தயாரித்த அக்குற்றப் பத்திரம் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டது. இது தொடர்பான மேலதிக புலனாய்வினை விரைவாக முடிவுறுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 4. கணக்களி தன்மையும் நல்லாட்சியும்

### 4.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) விஞ்ஞானம் தொழில்நுட்பம் (S and T) சார்ந்த கொள்கை தந்திரோபாயத் திட்டங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (S and T) | ஆணைக்குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடைமுறைப் படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்துருவாக்கம் (STI) தந்திரோபாவங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளில் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளில் 10 சதவீதம் அளவான செயற்பாடு மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | சார்ந்த கொள்கை, தந்திரோபாயங்கள், திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (S and T) புதிய கொள்கையை இனங்காணல் மற்றும் ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டத்தின் 9 ஆவது இரண்டாண்டுகள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்கிற்கு இணைவாக அறிமுகப்படுத்துவதற்கு கருத்தில் கொள்ளப்பட்டது. அந்த 9 ஆவது இரண்டாண்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்கு 2019 மார்ச் மாதம் நடைபெற்ற 200 ஆவது ஆணைக்குழு கூட்டத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் நடத்தாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அக்கருத்தரங்கினை 2020 ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக நிறுவனத்தில் காணப்பட்ட நிருவாகச் சிக்கலும் தாக்கமளித்திருந்தது. புதிய கொள்கைகளை இனங்காணல் மற்றும் தயாரித்தல் 2020 ஆம் ஆண்டின் போது சௌபாக்கியத்தின் தூரநோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு இணங்க பூர்த்தி செய்வதற்கு எண்ணியுள்ளதுடன் அதற்காக தற்பொழுது கலந்துரையாடப்பட்டுள்ளது என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன். | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப் படுதல் வேண்டும். |
| (ஆ) | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் (S&T) சம்பந்தமான கொள்கையை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளில் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்துருவாக்கல் (Science, Technology and Innovation (STI) கொள்கையை திருத்தம் செய்தல் 2018 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அக்கொள்கையை 2019 ஆம் | ஆணைக்குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்துக்கு இணங்க அமுல் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளில் 50 சதவீதம் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கை தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் வரைவு (Policy draft) பூர்த்தி செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அக்கொள்கையை வெளிக்காட்டுதலும் பிரசுரித்து வெளியிடுதலும் 9 ஆவது இரண்டாண்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருத்தரங்கிற்கு இணைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக்கருத்தரங்கினை 2019 ஆம் ஆண்டில் நடத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தலினை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 200 ஆவது ஆணைக்குழு கூட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அதன் காரணமாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை 2019 ஆம் ஆண்டின் போது வெளியிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை. காணப்படுகின்ற சுகாதார நிலைமையின் கீழ் இந்த ஈராண்டு கருத்தரங்கினை இவ்வாண்டின் இறுதியில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் சௌபாக்கிய தூரநோக்கின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான தொடக்க செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க உத்தேச தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்துருவாக்கல் கொள்கை அல்லது தந்திரோபாய திட்டங்களையும் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (இ) | இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமையினை (S and T) மதிப்பீடு செய்யும் செயற்திட்டத்தின் தரவு | 2018 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை (S and T Status) தொடர்பான அறிக்கைக்காக தரவுகளைச் | ஆணைக் குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படை (Database) இனை அபிவிருத்தி செய்தலினை நடைமுறை ஆண்டின் போது மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அதில் 60 சதவீதம் அளவானவை மாத்திரம் மீளாய்வாண்டின் போது முடிவுறுத்தப்பட்டிருந்தது. | சேகரித்தல் 2019 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் இடம்பெற்றதுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் அத்தரவுகளை வழங்குதல் தாமதமடைந்ததன் காரணமாக தரவுகளைச் சேகரித்தல், வழங்குதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், 2020 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. தரவுகளைச் சேகரித்தல் தற்பொழுது NSF இல் இருக்கும் சேவை வழங்கும் கணனியின் மூலம் (Server Computer) இடம்பெறுவதுடன் இந்த ஆண்டின் போது நஸ்டெக் நிறுவனத்திற்கு சேவை வழங்கும் கணனியை (Server Computer) வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது இதன் மூலம் இத்தரவு மூலங்களை அபிவிருத்தி செய்தலை மிகவும் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்துருவாக்கல் (STI) தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கான ஒரு முறைமையை ஸ்தாபிக்கும் செயற்திட்டம் தொடர்பாக சிரேஸ்ட விஞ்ஞானிகள், இளைஞர் விஞ்ஞானிகள் மற்றும் ஏனைய தொழில்சார் அமைப்புக்களின் விஞ்ஞானிகளை உள்ளடக்கிய வேலை செய்யும் குழுக்களை ஆரம்பிக்கும் செயற்பாடுகளின் போது 2019 ஆம் ஆண்டில் செயற்பாட்டுக் குழு 10 கூட்டங்களை நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 6 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. | இளைஞர் விஞ்ஞானிகள் சங்கத்தின் (YSF) செயற்பாட்டுக் குழுவின் (Steering Committee) 10 கூட்டங்களை 2019 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் குழு அங்கத்தவர்கள் அனைவரும் ஏனைய நிறுவனம் / பல்கலைக்கழகங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் கல்வியியலாளர்கள் மற்றும் கலாநிதிகள் என்பதனால் அவர்களின் செயற்பாடுகள் பல்வகையானதாக இருப்பதும் காரணமாக 6 குழுக் கூட்டங்களை மாத்திரம் நடாத்துவதற்கு முடியுமாக இருந்தது. எனினும் இந்த இளைஞர் விஞ்ஞானிகளின் சங்கம் மிகவும் செயற்திறனாகச் செயற்பட்டு எதிர்பார்த்த பங்களிப்பை நிறைவேற்றியுள்ளது. | ஆணைக்குழுவின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படுவதற்கு திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும். |